

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை சந்திப்பில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு, நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது.நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் முருகன்,கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாநில தலைவர் மைதீன்கான், மாலை ராஜா, ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,பேச்சிப்பாண்டியன், தர்மன், வண்ணை சேகர்,மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு, தினேஷ், பிரபு பாண்டியன்,சுதா மூர்த்தி, பூக்கடை அண்ணாத்துரை, சுப்பிரமணியன், நமசிவாயம்,டாக்டர்.சங்கர்,செய்யது முகைதீன், மாரியப்பன்,அருள்மணி,அன்பழகன், பிரான்சிஸ், ரேவதி பிரபு,மகேஸ்வரி, கதீஜா இக்லாம் பாசிலா, சரவணன், அய்யாசாமி பாண்டியன், டாக்டர் ரவி, கருப்பசாமி கோட்டையப்பன், காசிமணி, முத்துராமன், பிரேம் கணேசன், பட்சிராஜன், ஆனந்த், லெனின், சிந்து முருகன், அந்தோணி, செந்தில்,மேகை செல்வம், வேல்ராஜா, பாளை சதீஷ், உலகநாதன், ரவீந்தர், மாரியப்பன், மன்சூர், அலிசேக் மன்சூர்,கோகிலவணி சுரேஷ்,சகாய ஜூலியட் மேரி,ராஜேஸ்வரி,வசந்தா, சபி அமீர்பாத்து,அனார்கலி சுபஹாணி, அப்துல் சுபஹாணி, ராஜேந்திரன், வேல்சாமி பாண்டியன், சுரேஷ் குமார், வேங்கை வெங்கடேஷ், மீரான் மைதீன், மணிகண்டன், நெல்லை முத்தையா, சி.பா.இராவணன்,மில் குமார்,கவிஞர் மூர்த்தி, ரவி, மூபீன் இஸ்மாயில், வாசுகி செல்லதுரை,பேட்டை ராஜேந்திரன், பத்மா,மேரி, அனிதா, பவானி,சௌந்தரம் முத்துராஜ், ரேவதி அசோக்,மேகலா உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

### நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் – விருதுநகரில்

# தென்மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு குறித்து ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில்!

நெல்லை, பிப். 6 -

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விருதுநகரில் நாளை (07.02.2026) நடைபெற உள்ள தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு நடைபெறுவது குறித்து அதில் கலந்து கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வள்ளியூரில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.

கழக தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக துணை பொது செயலாளர், தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் ஆலோசனைப்படி நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் சென்னை மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் ராஜா ஆகியோர் மற்றும் அவர்களோடு வருகை தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறுப்பாளர்கள் விருதுநகரில் நாளை (07.02.2026) நடைபெற இருக்கின்ற இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் கலந்து கொள்ளும் பாளை தெற்கு, பாளை மத்திய ஒன்றிய,பாளை வடக்கு ஒன்றிய,வள்ளியூர் வடக்கு ஒன்றிய,வள்ளியூர் பேரூர், நாங்குநேரி மேற்கு ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

இதில் பாளை மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன், பாளை வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வேலங்குளம் கண்ணன், பாளை தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் சுபாஷ் தங்கபாண்டியன், வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் சுடலைக்கண்ணு, வள்ளியூர் பேரூர் செயலாளர் வி. எஸ்.எஸ்.சேதுராமலிங்கம், மாவட்டப் பொறுப்பு குழு உறுப்பினர்கள் ஆதி பாண்டி,சந்திரகலா உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




